**மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வடக்கு மாகாணம்.**

மூன்றாம் தவணைப் பரீட்சை -2018

# தமிழ் இலக்கிய நயம் I,II

**விடைத்தாள்**

**தரம் - 11**

**(01)**

1. அ) சோழமன்னன்

   ஆ) இளங்கோ அடிகள்

2. அ) பாரூக்கின்/ தபாற்காரனின்

   ஆ) உவமை அணி

3. அ) சேவல் - தீவு மனிதனின் தந்தை

   பேடு – தீவு மனிதனின் தாய்

   ஆ) வெறுப்பு/ கோபம்

4. அ)) அம்மாவுக்குரிய உரிமைகளை வழங்காமை/ பெண்கள் பற்றிய பிற்போக்கான எண்ணம்

   அ) சகதி/சேறு

5. அ) மாரிக் காலத்தின்/மழைக்காலத்தின் முடிவு

   ஆ) சுக்கிரீவன்

**(02)**

1) காலையில் பனிக்குளிரில் வேலைக்குச் செல்லுதல்

   விரல்கள் விறைந்த நிலையிலும், உடல் குளிரில் நடுங்கும் நிலையிலும் வேலை செய்தல்.

   எண்ணங்களில் வேதனை, துன்பஒலி

2) வெட்டிய செடியிலிருந்து அரும்பு முளைப்பது போல எமது நிலையிலிருந்து மேலெழும் எண்ணங்களே மனதில் உள்ளன என்று கூறுவதன் மூலமும் எம்மை மூடிய பேரிருள் ஓட்டிடுவோம் என்று கூறுவதன் மூலமும்

3) தங்கத்தளிர்

   வெண்டை விரல்கள்

   கொண்டை விழிகள்

   வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென

4) நெஞ்சத்தை மேடையாக உருவகித்தல்

நினைவுகள் வந்து செல்வதை சதிராடுவதாகக் கூறல்

5) பனிகாயுமுன்னே குளிர்காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம்.

சங்கு ஊது முன்னே தங்கத்தளிரினைக் கிள்ளிடுவோம்.

தளிர்கிள்ளவோ கைகள் பரபரக்கும்.

இரு கெண்டை விழிகள் பளபளக்கும்.

**(03)**

1. தாம் வெறுப்பவர் மீது போர் தொடுத்து வெற்றி பெறல் வெற்றி மூலம் புகழ் கிடைத்தல்
2. நாட்டு மக்களின் நன்மைக்காகவே போர் செய்ததாக அவர்களை நம்ப வைத்தமை.
3. பிறர் நாட்டின் மேலே தற்காப்புச் செயல்முறையில் போரிடுதலும் வலுப்போருக்குச் செல்லுதலும்
4. புகழ் பெறுவதற்காக பிறருடைய நாட்டைப் பற்றிக் கவலைப்படாது போர் புரிதலை ஒரு வாய்ப்பாகவே கொண்டனர்.
5. வலுப்போருக்குப் போதல் - எவ்வித காரணமும் இன்றித் தாமாகவே வலிந்து போருக்குப் போதல்.

புகழ் வேட்டையாடல் - புகழ் தருபவற்றைத் தேடிச் செய்தல்.

**(04)**

அ) **சோழமன்னனின் பெருமைகள்**

சந்திரன் போன்ற குளிர்ச்சியான வெண்கொற்றக் குடையை உடையவன் அறநெறிதவறாத செங்கோல் ஆட்சி செலுத்துபவன்

நீர்வளம் மிக்க நாட்டை உடையவன்

காவலரண்களில் வீரர்கள் இருக்கத் தேவையற்றதான, பகைவருக்குப் படையெடுக்க அச்சம் தரும் வீரத்தை உடையவன்

பகைவருக்கு அச்சம் தரும் வேலைக் கொண்டவன்

நடுநிலை தவறாதவன்

உயிர்களைப் பாதுகாக்கும் ஆட்சி அதிகாரத்தை உடையவன்

ஆ) காவிரி ஆற்றின் சிறப்பு

சோழமன்னன் கங்கையில் நீராடினாலும் வெறுக்காத தன்மை

உழவரின் ஆரவாரம், மதகில் நீர் செல்லும் ஓசை, கரைகளை

உடைத்துப்பாயும் ஓசை என்பன கேட்கும் வகையில் நடந்து செல்வது

பூக்களை ஆடையாகவும் கயல் மீன்களைக் கண்களாகவும் கொண்டது

சோழநாட்டைக் குழந்தையாகக் கருதி அதற்கு நீரூட்டி வளர்க்கும் தாயாக, ஊழிக் காலங்களாக, பேருதவி புரிந்து வருவது, கரைகளில் வண்டுகள் சத்தமிடவும் மயில்கள் ஆடவும் குயில்கள் பாடவும் உதவும் சோலைகள் உருவாகக் காரணமாக அமைவது.

**(05)** உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றன எமக்குரிய உரிமைகளை நாம் பெற்று வாழ, செலுத்த வேண்டிய வழியே கடமை

கடமையைச் செய்யத் தவறுபவர்களுக்கு உரிமை கிடையாது.

குடும்பம், அலுவலகம் முதலிய எந்தத் தொகுதிகளிலும் உரிமையும் உண்டு கடமையும் உண்டு.

கடமையைப் புறக்கணிக்கும் போது, உரிமை கிடைக்காமல் போவதோடு குழப்பங்களும் ஏற்படும்.

உரிமை பற்றி எண்ணும் அளவிற்குக் கடமை செய்வது பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். முடிந்தவரை உரிமையை விடக் கடமையையே பெரிதாகப் போற்ற வேண்டும்.

agaram.lk

உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை நீக்க இயற்கை அமைத்த பாதுகாப்பே அன்பு.
அன்பு சிறந்திருக்கும் இடத்தில் உரிமைக்கான போராட்டமும் கடமை செய்வதிற் குறைவுபடுதலும் இருப்பதில்லை.
பழங்காலத்தில் உரிமை சிலருக்கும் கடமை பலருக்கும் என்ற நிலை இப்போது ஒவ்வொருவருக்கும் உரிமையும் கடமையும் அவரவர் பெறும் உரிமைக்கு வரியாகக் கடமைகளை மதித்துச் செய்ய வேண்டும்.

**(06)**

<u>கண்ணகி</u>

அரச அதிகாரத்தின் அநீதி சிதறச் சிலம்பறைந்து முழங்கிய வீரம் திருநகர் தீயிட்ட சினம்.
கணவனின் துரோகத்தை எளிதில் மன்னித்தவள்.
பொறாமைக்குணம் அற்றவள்.
ஓர் ஆணுக்காக இன்னொரு பெண்ணுடன் போட்டியிடும் தாழ்வு நிலைக்குச் செல்லாதவள்
எதிரி என்றாலும் திறமையை மதிப்பவள். மாதவியின் கவிபுனையும் ஆற்றல், தர்க்க, சாத்திர நூலறிவு என்பவற்றைப் பெரிதாக மதிக்கிறாள்.

<u>காவற்பெண்டு</u>

தன்னம்பிக்கை (எனக்கொன்றும் அப்படி வயதாகி விடவில்லை, வாருங்கள்போகலாம்)
கண்ணகி அடைந்த கொடுமைகள் கண்டு இரங்கும் குணம் (என் மகள் என்னும் பாசம்)
கண்ணகியின் இயல்புகளை நன்கறிந்தவள்.
பிறற் துயரம் தீர்ப்பதற்காகப் பொய் சொல்லி நம்பிக்கையூட்டுபவள்.
இளமைக்காதல் நினைவுகளை இன்னும் பேணிவருபவள்.
கண்ணகியின் காலிருந்த சிலம்பைக் கழற்றியமைக்காகத் தினமும் வருந்திக் கொண்டிருப்பவள்.

**(07)** ஹைக்கூ கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குவதற்கேற்ப புள்ளி வழங்கவும்.

agaram.lk